මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

web : www.elections.gov.lk e-mail : info@elections.gov.lk

මැතිවරණ මහලේකම් කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

මගේ අංකය :
எனது இல. : LAE/2023/09 PV-II
ඔබේ අංකය :
உமது இல. :
දිනය :
திகதி : 2023.01.04

சுற்றறிக்கை இல. 17

மிக அவசரம் / மிக முக்கியம்

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்/
மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்களின் செயலாளர்கள்/
திணைக்களத் தலைவர்கள்/ ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்,

<u>உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2023</u>
<u>அஞ்சல் மூல வாக்களிப்பு</u>

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 39ஆ (3) ஆம் பந்திக்கமைய பெயர்குறித்த நியமனம் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதிக்குப் பிந்திய 10 நாள் காலக்கெடுவுக்குள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ள தேருநர்கள் அனைவரும் அதாவது, வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபடுவதன் காரணமாக அல்லது கட்டாயமாக பேணப்பட வேண்டிய வேறு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவதன் காரணமாக தமக்கு ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று வாக்களிப்பதற்கு வாய்ப்பில்லாமற் செல்ல வாய்ப்புள்ள வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு வசதியளிக்கப்படல் வேண்டும்.

02. அதன்படி, தங்களது நிறுவனத்தில்/அலுவலகத்தில் பணிபுரிடும் அதேபோல், அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைவரது விண்ணப்பங்களும் 2023.01.05 ஆம் திகதியிலிருந்து 2023.01.23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறித்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

03. அவ்வாறான உரித்துள்ள ஆட்கள் தமது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பத்தை தமது அலுவலகத்தின் நெருங்கிய தலைவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரை உரிய முறையில் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் குறித்த உள்ளூர் அதிகாரசபைக்குரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும். அதேபோல், அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் அல்லது அதற்கு முன்னர் குறித்த விண்ணப்பங்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றிருத்தல் வேண்டும். அத்திகதிக்கு பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04. தங்களது நிறுவனத்தின் அலுவலர்களின்/ஊழியர்களின் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் அந்நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் அலுவலரொருவரை பெயர்குறித்து அவர் மூலம் நிறுவனத்தின் அனைத்து அலுவலர்களையும் அறிவுறுத்தி உரிய திகதிக்கு முன்னர் அத்தாட்சிப்படுத்திய அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். *தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்கள் தவிர்ந்த அரசாங்க சேவையையும் மாகாண அரசாங்க சேவையையும் சேர்ந்த அனைத்து அலுவலர்களும் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பதோடு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்காதிருத்தலும் குறைபாடுகளுடன் கூடியதாக முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதும் தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவதற்கான ஒரு காரணமன்று.*

05. அஞ்சல் வாக்களிப்பதற்கு உரித்துடையவர்கள்

39ஆ (2) ஆம் பந்தி

அஞ்சல் வாக்காளரொருவராக கணிக்கப்படுவதற்கு தகைமையுடைவர்கள்

5.1. கடமைகளின் நிமித்தம் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியாமல்போகும் சாத்தியமுள்ள முப்படைகளின் அங்கத்தவர்கள், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு படையணியைச் சேர்ந்த அலுவலர்கள்;

5.2. கடமைகளின் நிமித்தம் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாமல்போகும் சாத்தியமுள்ள இலங்கை புகையிரதத் திணைக்கள அலுவலர்களும் ஊழியர்களும்;

5.3. கடமைகளின் நிமித்தம் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாமல்போகும் சாத்தியமுள்ள அஞ்சல் திணைக்கள அலுவலர்களும் ஊழியர்களும்;

5.4. கடமைகளின் நிமித்தம் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாமல் போகும் சாத்தியமுள்ள தொலைதொடர்புகள் திணைக்கள அலுவலர்களும் ஊழியர்களும்;

5.5. கடமைகளின் நிமித்தம் குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாமல்போகும் சாத்தியமுள்ள இலங்கை மத்திய போக்குவரத்து சபை அலுவலர்களும் ஊழியர்களும்;

5.6. வேறேதேனும் வாக்கெடுப்புப் பிரதேசமொன்றின் வேட்புரிமை காரணமாக தமக்கு குறித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியாமல்போகும் வேட்பாளர்கள்;

5.7. வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய பணிகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உள்ளூராட்சி, மாகாண அரச சேவை, மத்திய அரச சேவையின் அலுவலர்களும் ஊழியர்களும்;

5.8. தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்திக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அரச பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும்;

5.9 தேர்தல் கடமைகளுக்காக சேவை வழங்கும் நிறுவனங்களாக தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் அலுவலர்களும் ஊழியர்களும்;

5.10 இது தவிர சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள் அழைத்துச்செல்லும் உதவியாளர்ளாகப் பணி புரியும் அரச சேவையின் கனிட்ட ஊழியர்கள் (உதாரணமாக: அலுவலகப் பணி உதவியாளர், நிலஅளவை உதவியாளர், பாடசாலை வேலையாட்களுக்கும் அஞ்சல் வாக்கு வசதிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.)

06. தேருநர் இடாப்புக்களை வெளிக்காட்டி வைத்திருத்தல்

6.1 அஞ்சல் வாக்காளர்களின் வசதிக்காக இந்த உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலுக்கு செல்லுபடியான தேருநர் இடாப்பை 2023.01.05 ஆம் திகதியிலிருந்து பின்வரும் இடங்களில் வெளிக்காட்டி வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- அனைத்து மாவட்டச் செயலகங்கள் (கச்சேரிகள்)
- அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள்
- அனைத்து உள்ளூர் அதிகாரசபைகள்
- அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்கள்

} சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரசபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய தேருநர் இடாப்பு

07. அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல்

7.1 இந்த உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலின்போது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை பின்வரும் பிரதான ஐந்து முறைகளில் மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. பின்வரும் இல. I. II, III ஆகியவற்றுக்கான விரிவான வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (LAE/2023/09/A)

7.2 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அச்சிடுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகையால், பின்வரும் I. II, III ஆகிய முறைகளின் மூலம் விண்ணப்பிப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு அஞ்சல் வாக்காளர்களை அறிவுறுத்துமாறு அறிவிக்கின்றேன்.

I. தாமாகவே நிகழ்நிலை ஊடாக விண்ணப்பித்தல் **(Self-online Applying)**

அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தமது தகவல்களையும் உரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல்களையும் தேர்தல் இ-சேவை (https://eservices.elections.gov.lk) ஊடாக உட்படுத்தி விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்படுகிறது. இவ்வாறு நிகழ்நிலையாக தேர்தல் இ-சேவை ஊடாக பூரணப்படுத்திய பின் பதிவிறக்கம்செய்து விண்ணப்பத்தின் அச்சிட்ட பிரதியை (விண்ணப்பதாரியினதும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரினதும் தகவல்களையும் உட்படுத்தி) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் உரிய தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். இந்த முறைக்கு விண்ணப்பதாரியினால் இ-சேவை பயனர் கணக்கொன்றை (User Account) தயாரித்துக்கொள்ள வேண்டும்.

II. நிறுவனம் மூலம் நிகழ்நிலையாக விண்ணப்பித்தல் **(Certifying Officer Online Applying)**

நிறுவனத்தின் அஞ்சல் வாக்கு விண்ணப்பிக்கும் அனைத்து அலுவலர்களின் தகவல்களையும் (அத்தாட்சிப்படுத்தும் அலுவலரினதும் தகவல்கள் அடங்கலாக) அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அல்லது அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் உதவியாளர் ஒருவரினால் தேர்தல் இ-சேவை மூலம் பூரணப்படுத்தியதன் பின்னர் குறித்த விண்ணப்பங்கள் யாவற்றையும் பதிவிறக்கம்செய்து அத்தாட்சிப்படுத்தி குறித்த தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நிறுவனத்தின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்குரிய இ-சேவை கணக்கின் மூலம் இதனை மேற்கொள்ள வேண்டும்.

III. தரவுகளை அச்சிட்டுக்கொள்ளும் முறை (பகுதியளவு நிகழ்நிலை முறை)
**(Semi Online Data Printing Appplying)**

மேலே I அல்லது II முறைகளைப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தேர்தல் இ-சேவை மூலம் அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரியின் விண்ணப்ப இலக்கத்தை மாத்திரம் உட்படுத்தி விண்ணப்பதாரியே நிகழ்நிலை ஊடாக விண்ணப்பத்தைத் தயாரித்துக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரி நிகழ்நிலை ஊடாக தயாரித்து அச்சிட்ட விண்ணபத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு வழங்கியதன் பின்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் தகவல்களையும் பூரணப்படுத்தி அத்தாட்சிப்படுத்தியதைத் தொடர்ந்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஊடாக உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

IV. உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பத்தைட் பெற்றுக்கொள்ளல்

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு (https://elections.gov.lk) பிரவேசித்து அதிலுள்ள அஞ்சல் வாக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து அச்சிட்டு விண்ணப்பதாரிக்குரிய தகவல்களைப் பூரணப்படுத்தியதன் பின்னர் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் தமது தகவல்களையும் உட்படுத்தி குறித்த மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

V. அச்சிட்ட விண்ணபத்தைப் பெற்றுக்கொள்ளல் (பொதுவான முறை)

தேர்தல் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் அச்சிட்ட விண்ணப்பப்படிவமொன்றைப் பூரணப்படுத்தி அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் ஊடாக தேர்தல்கள் அலுவலகத்திற்கு அனுப்புதல்.

7.3 அவ்வாறில்லாத பட்சத்தில், அரசாங்க தகவல் மையத்தின் 1919 என்ற இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதன் மூலமும் 2022 தேருநர் இடாப்புத் தகவல்களைப் பெற்றுக் கொடுக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது குறித்து தங்களது மாவட்டத்தின் தாபனத் தலைவர்களுக்கு/ அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

7.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் தேருநர் இடாப்பில் பதியப்பட்டிராத விண்ணப்பதாரிகளுக்கு தேருநர் இடாப்புக்கள் புத்தகங்களாக காட்சிப்படுத்தப்படும் மேலே 6.1 இல் குறிப்பிடப்படும் இடமொன்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள நேரிடும்.

7.5 ஒரே மாதிரியான பெயர்களைக்கொண்ட நபர்கள் காணப்படுவதனால் தமது தகவல்களை வேறொருவரைக் கொண்டு பரீட்சித்து அஞ்சல் வாக்கு விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

08. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்துதல்

8.1 அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் தமக்குக் கிடைக்கும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை உரிய தேருநரின் நெருங்கிய தலைவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் கிடைக்கப் பெற்றமை பற்றி உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதோடு, அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் தனது பெயர், அலுவலக முகவரியுடன்கூடிய பதவி இலச்சினை மற்றும் கையொப்பத்தை இட்டு அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். தேருநர், அத்தாட்சிப்படுத்தும் அலுவலராகப் பணியாற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் தனது விண்ணப்பத்தை தானே அத்தாட்சிப்படுத்திக் கொள்ள முடியும்.

8.2 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை முன்வைக்கும் ஒவ்வோர் அலுவலகத்திற்கான விசேட குறியீட்டு இலக்கமொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்குறியீட்டு இலக்கத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமிக்கும் விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் மூலம் அல்லது உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை வினவுவதன் மூலம் ஒவ்வோர் அலுவலகத்திற்கும் உரிய குறியீட்டு இலக்கங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

09. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

9.1 அத்தாட்சிப்படுத்தும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அன்றைய தினமே அல்லது அதற்கு மறு நாள் தவறாமல் உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். இதற்கு இலவச அஞ்சல் வசதி வழங்கப்படுவதனால், அஞ்சல் தலை ஒட்ட வேண்டியதில்லை. "முன்னுரிமைச் சேவை" லேபல் அல்லது அவ்வாசகத்தை கடித உறையில் தெளிவாகக் குறிப்பிடுவது போதுமானதே. அத்தாட்சிப்படுத்திய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஒவ்வொன்றாகப் பரீட்சித்து அஞ்சல் வாக்காளரின் வாக்கு பதிவு செய்யப்பட்டுள்ள மாவட்டத்தின் (தேர்தல் அலுவலகங்களின்) தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்.

9.2 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் அஞ்சல் மூலம் அல்லது வேறு வழிகளில் கிடைக்கும் அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிக்க நேரிடும். அதன் காரணமாக அஞ்சல் வாக்கு விண்ணப்ப முடிவுத் திகதியில் அத்தாட்சிப்படுத்தப்படும் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அஞ்சலிடுவதற்கு அனுப்புவதன் மூலம் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உரிய தினத்திக்கு முன்னர் கிடைக்கப்பெறுவதில் பிரச்சினைகள் ஏற்படலாமென்பதால், இறுதி 02 நாட்களுக்குள் அத்தாட்சிப்படுத்தப்படும் விண்ணப்பங்களை தமது அலுவலகம் அமைந்துள்ள மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு தயவுடன் ஆலோசனை வழங்கவும். அவ்வாறு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் ஒப்படைக்கப்படும் விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகளின் வாக்கைப் பதிவுசெய்த மாவட்டங்கள் வாரியாக வேறு பிரித்து ஒப்படைப்பதன் மூலம் இப்பணியை மேலும் வசதியாக மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

9.3 அனைத்து நிருவாக மாவட்டங்களின் உள்ளூர் அதிகாரசபை அதிகாரப் பிரதேசங்களில் வதியும் அஞ்சல் வாக்காளர்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களையும் குறித்த மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

அந்தந்த மாவட்டங்களின் அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலக முகவரிகளைக் காட்டும் ஆவணம், இத்துடன் *இணைப்பு I* இல் காட்டப்பட்டுள்ளது.

10. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல்

அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமிப்பதற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை (இணைப்பு II) பயன்படுத்த வேண்டும் என்பதோடு, *அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் நியமனக் கடிதங்களை நிறுவனம் அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு மாத்திரம் உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும் என்பதையும் அறிவிக்கின்றேன். இந்நியமனக் கடிதங்களை இராஜகிரிய சரண மாவத்தையில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பிவைப்பதைத் தவிர்க்குமாறு தயவுடன் அறிவிக்கப்படுகின்றது.*

10.1 நிறுவனமொன்றில் பெரும் எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் இருக்கும்போது குறித்த தாபனத் தலைவர்களினால் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் சிலரை நியமிக்கும் தேவை ஏற்படுவதோடு, கடந்த தேர்தல்களின்போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் தகவல்களையும் ஆவணங்களையும் பயன்படுத்துவதன் மூலம் இந்த உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள் என்பதை மேலும் அறிவிக்கின்றேன்.

10.2 கடந்த தேர்தல்களின்போது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாகப் பணியாற்றிய, ஆர்வத்தோடும் சரியாகவும் செயலாற்றிய, அனுபவம் வாய்ந்த அலுவலர்களுக்கு முன்னுரிமை கிடைக்கக்கூடிய விதத்தில் பதவிநிலை அலுவலர்களை நியமிப்பது உகந்தது.

10.3 கடந்த தேர்தல்களின்போது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அல்லது கவனயீனமாக செயற்பட்ட அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை இம்முறை அப்பதவிக்கு நியமிக்காதிருத்தல்.

10.4 அஞ்சல் வாக்காளர்களுக்கு வசதியாக சென்றடையக்கூடிய ஓரிடத்தில் அலுவலகம் அமைந்துள்ள ஒருவரை அவர்களின் அஞ்சல் வாக்காளர்களின் அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக நியமித்தல்.

10.5 விசேட அரசியல் தொடர்புகளுள்ள ஆட்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக நியமிக்காதிருத்தல்.

10.6 அஞ்சல் வாக்கு தொடர்பான முழுப் பொறுப்பும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு ஒப்படைக்கப்படுவதனால், பொறுப்புக்களை வகிக்கக்கூடிய அலுவலர்களை மாத்திரம் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமித்தல்.

10.7 அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் தமது அலுவலகத்தின்/நிறுவனத்தின் அஞ்சலுக்குப் பொறுப்பாக செயலாற்றும் அலுவலர்களை அறிவுறுத்தி தமது பெயருக்கு கிடைக்கும் காப்புறுதி அஞ்சல் வாக்கு பக்கற்றுக்களையும் கடிதங்களையும் திறக்காமல் தாமதமின்றி தனக்கே கிடைக்கக்கூடியவாறான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்துக்கொள்ளல்.

10.8 இக்காலப்பகுதியினுள் இயன்றளவில்வெளிக்கள அவதானிப்புகள், பரிசோதிப்புகள் போன்ற கடமை அலுவல்களுக்காக அலுவலகத்திற்கு வெளியில் செல்வதை மட்டுப்படுத்தல் அல்லது அக்கடமைகளுக்காக இனிவரும் நாட்களை பயன்படுத்தல்.

10.9 தமக்கு அஞ்சல் மூலம் கிடைக்கும் காப்புறுதி பக்கற்றுக்களை திறக்காமல் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்பதோடு, காப்புறுதி அஞ்சல் வாக்கு பக்கற்றுக்கள் கிடைக்கக்கூடியவாறு அதற்குரிய தகவல்களை ஜேர்னலில் பதிதல்.

10.10 அஞ்சல் மூலம் கிடைக்கும் காப்புறுதி உறைகளை பாதுகாப்பான முறையில் தமது காப்பில் வைத்திருப்பதற்கான வசதிகளைக் கொண்ட அலுவலரொருவரை இதற்காக நியமித்தல்.

10.11 அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலக குறியீட்டு இலக்கத்தையும் கட்டாயமாகவே விண்ணப்பத்தில் குறித்தல்.

10.12 அஞ்சல் வாக்கு அடையாளமிடுதல் உயர்ந்தபட்சம் இரண்டு நாட்களுடன் மட்டுப்படுத்தப்படுவதனால், அலுவலரொருவருக்கு உயர்ந்தபட்சம் சுமார் 200-250 அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்துவதற்கான பொறுப்பை ஒப்படைப்பது மிக உகந்தது.

10.13 அஞ்சல் வாக்களிப்புத் திகதிக்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ள மற்றும் வெளிநாடு செல்லவுள்ள அலுவலர்களை அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக நியமிப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

11. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு தம்மால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதிவேடொன்றை (இணைப்பு III) பேணிவருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் என்பதோடு, அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் அவற்றை அங்கீகரிக்கப்பட்டமைக்கான/ நிராகரிக்கப்பட்டமைக்கான அறிவித்தலையும் அங்கீகரிக்கப்பட்ட அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளுக்கு வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பக்கற்றுக்களை அனுப்புவதற்காக அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர், பதவி, அலுவலக குறியீட்டு இலக்கம், அலுவலக முகவரி (கட்டாயமாகவே பதவி இலச்சினை மூலம்) விண்ணப்பத்தில் குறிப்பிடுமாறும் அறிவுறுத்தல் வழங்கவும்.

12. பூரணப்படுத்திய அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களின் தகவல்கள் சரியானவை என்பதை உறுதிசெய்துகொண்டு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் அவற்றை உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்புதல் வேண்டும். அதேபோல், விண்ணப்பதாரரொருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் விண்ணப்பங்களை சிபார்சு செய்வதையும் போலியான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்புவதையும் தவிர்க்குமாறு பெரிதும் வலியுறுத்தப்படுகின்றது.

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்கான தகவல்களை வழங்குதல், அவற்றைச் சமர்ப்பித்தல், அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல் ஆகியவற்றுக்குரிய விடயங்கள் மாத்திரம் இச்சுற்றறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அஞ்சல் வாக்கு செயன்முறைக்கு அவசியமான ஏனைய அறிவுறுத்தல்களும் நடபடிமுறைகளும் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்காக எதிர்காலத்தில் நடாத்தப்படும் அறிவுறுத்தல் வழங்கும் கலந்துரையாடல்களின் போது தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வழங்கப்படும். தெரிவத்தாட்சி அலுவலரினால் நடாத்தப்படும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான அமர்வுகளில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் கலந்துகொள்வது இன்றியமையாதது என்பதை அவர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்க விரும்புகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள்:


1. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்

} தகவலுக்கும் மாவட்டத்தின் அரச நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கும்.


3. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் - தகவலுக்காக.

## இ-சேவைக் கணக்கொன்றை (e-services account) தயாரித்துக் கொள்ளல்

01) தேர்தல் இ-சேவைக் கணக்கொன்றைத் தயாரித்துக் கொள்வதற்காக **https://eservices.elections.gov.lk** என்ற தேர்தல் இ-சேவை இணையத்தளத்தினுட் பிரவேசித்து அதிலுள்ள **SignUp** ஐ அணுகுங்கள்.




02) அப்போது கணக்கைத் தயாரித்துக்கொள்வதற்காக கணக்கைத் தயாரித்துக் கொள்பவரின் தகவல்களை உட்படுத்த வேண்டிய திரைக்குச் செல்லும்.



03) அதில் கேட்கப்படும் தகவல்களை ஆங்கில மொழில் மாத்திரம் உட்படுத்தவும். இதற்கு கணக்கைத் தயாரித்துக்கொள்பவரின் தனிப்பட்ட தகவல்களை உட்படுத்த வேண்டும். எக்காரணத்தினாலும் கடமை சார்ந்த தகவல்களை அல்லது மற்றொருவரின் தகவல்களை இங்கு உட்படுத்தலாகாது.

இங்கு,

**SLIN / NIC:**

தேசிய அடையாள அட்டை இலக்கத்தை சரியான முறையில் உட்படுத்தவும். அதனை மீண்டும் பல தடவைகள் சரியாக உட்படுத்தப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும். அந்த அடையாள அட்டை இலக்கத்தை உட்படுத்தியதும் அதன் பயனாக உங்களுக்குரிய பயனர் கணக்கின் பெயர் தானியங்கி முறையில் உருவாகும். அது User Name என்ற இடத்தில் தோற்றமளிக்கும். இந்த பயனர் பெயர் உங்கள் அடையாள அட்டை இலக்கத்திற்குச் சமமான 12 இலக்கங்களைக் கொண்டதாகும். அதனை மாற்றுவதற்கு வாய்ப்பில்லை.

**Registered Mobile No :**

என்பதன் கீழ் உங்களுக்கே உரிய எப்பொழுதும் பாவனையில் இருக்கும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை உட்படுத்தவும். கணக்கிற்குரிய மேலதிக தகவல்கள் குறும் தகவல்களாக (SMS) இந்த இலக்கத்திற்குக் கிடைக்கும்.

**Email :**


என்பதன் கீழ் உங்களுக்கே உரிய எப்பொழுதும் பாவனையிலுள்ள தனிப்பட்ட மின்னஞ்சல் (e-mail) முகவரியை உட்படுத்தவும். உங்களது அலுவலக அல்லது வேறு மின்னஞ்சல் முகவரிகளை உட்படுத்துவதைத் தவிர்க்கவும்.

**Password :**


என்பதன் கீழ் எவராலும் ஊகித்து அறிய முடியாத அதேபோல் உங்களுக்கு இலகுவாக ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய உறுதியான ஒரு கடவுச்சொல்லை (password) தயாரித்து உட்படுத்தவும். இனிவரும் நடவடிக்கைகளின்போது இக்கடவுச் சொல்லையே உங்களது பயனர் பெயருடன் பயன்படுத்த வேண்டும்.

கடவுச்சொல்லை உட்படுத்தியதன் பின்னர் **Password (Retype)** என்ற இடத்திற்கு மீண்டும் அதே கடவுச்சொல்லை உட்படுத்தவும்.


04) அதன் பின்னர் பின்வரும் இடங்களில் ☑ அடையாளமிட்டு **Sign Up** என்ற பொத்தானை அழுத்தவும்.




05) அப்போது நீங்கள் உட்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு சரிபார்க்கும குறியீடு கிடைக்கும். அதனை உட்படுத்தக்கூடிய விதத்தில் திரை மாற்றமடையும்.



06) அந்த இடத்தில் உங்களது கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்குக் கிடைத்துள்ள குறியீட்டை உட்படுத்தவும். அப்போது கணக்கு வெற்றிகரமாக தயாரித்து முடிக்கப்பட்டிருக்கும் என்பதுடன், கணக்கில் உட்படுத்துவதற்கு பயனர் பெயரையும் கடவுச் சொல்லையும் வினவும் திரை தோன்றும்.




07) உங்களது (12 இலக்கங்களைக் கொண்ட) பயனர் பெயரையும் நீங்கள் தயாரித்துக் கொண்ட கடவுச்சொல்லையும் அங்கு உட்படுத்தி இனிவரும் நடவடிக்கைகளுக்காக கணக்கினுட் பிரவேசிக்கவும்.

# அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள்

| | முகவரி | | தொலைபேசி இலக்கங்கள் | | மாவட்ட தேர்தல்கள் அலுவலக தொலைநகல் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| | | | மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | |
| 01 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | "நிலமெதுர", நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 | 011 2369134 | 011 2369437<br>011 2369438 | 01 2369279<br>01 2369481 |
| 02 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கம்பஹா | 033 2222841 | 033 2222047 | 033 2223462 |
| 03 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | களுத்துறை | 034 2222235 | 034 2222266 | 034 2222247 |
| 04 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கண்டி | 0812222233/35 | 081 2233187 | 081 2233190 |
| 05 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மாத்தளை | 066 2222236 | 066 2222422 | 066 2230401 |
| 06 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | நுவரெலியா | 052 22222235 | 052 2222325 | 052 2222066 |
| 07 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | காலி | 091 2234235 | 091 2234028 | 091 2234018 |
| 08 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மாத்தறை | 041 2222235 | 041 2222305 | 041 2244645 |
| 09 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | அம்பாந்தோட்டை | 047 2256235 | 047 2256248 | 047 2256495 |
| 10 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | யாழ்ப்பாணம் | 021 2222235 | 021 2222655 | 021 2228002 |
| 11 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கிளிநொச்சி | 021 2283965 | 021 2285664 | 021 2283819 |
| 12 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | வவுனியா | 024 2222235 | 024 2222311 | 024 2228911 |
| 13 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மன்னார் | 023 2222235 | 023 2222289 | 023 2223710 |
| 14 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | முல்லைத்தீவு | 021 2290035 | 021 2061426 | 021 2061427 |
| 15 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மட்டக்களப்பு | 065 2224435 | 065 2224312 | 065 2224374 |
| 16 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | அம்பாறை | 063 2222206 | 063 2224342 | 063 2224342 |
| 17 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | திருகோணமலை | 026 2222235 | 026 2222304 | 026 2224975 |
| 18 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | குருணாகல் | 037 2222235 | 037 2222369 | 037 2221549 |
| 19 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | புத்தளம் | 032 2265235 | 032 2265246 | 032 2265302 |
| 20 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | அநுராதபுரம் | 025 2235479 | 025 2222551 | 0252226440 |
| 21 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | பொலன்னறுவை | 027 2222235 | 027 2222012 | 027 2057320 |
| 22 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | பதுளை | 055 2222235 | 055 2222424 | 055 2225222 |
| 23 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | மொணராகலை | 055 2276235 | 055 2276315 | 055 2276291 |
| 24 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | இரத்தினபுரி | 045 2222235 | 045 2222023 | 045 2221905 |
| 25 | மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | கேகாலை | 035 2222235 | 035 2222561 | 035 2232003 |

LAE/2023/
(மாதிரி)

அலுவலக முகவரி: ........................................
........................................
........................................
........................................

திகதி: 20......... / ......... / .........

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்,
.......................................................... மாவட்டம்

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2023
## அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை நியமித்தல்

01. நிறுவனத்தின் பெயர்:- ..........................................................................................................

02. (அ) அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் பெயர்:- ..................................................

(ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம் | | | | | | | | | | | |

(இ) அலுவலக குறியீட்டு இலக்கம்* | | | ■ | | | | | ■ | | | ■ | |

03. பதவி:- ..........................................................................................................

04. (அ) அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம்:- ..............................

(ஆ) அலுவலக முகவரி:- ..........................................................................................................

(இ) அலுவலக தொலைபேசி: .............. (ஈ) தொலைநகல்: ............ (உ) மின்னஞ்சல்: ..................

05. (அ) பிரத்தியேக முகவரி:- ..........................................................................................................

(ஆ) தொலைபேசி இலக்கம் (செல்லிட):- ..........................................................................................................

06. அலுவலரின் மாதிரிக் கையொப்பம்:- ..................................................

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களில் பொறிக்கப்படும் பதவி இலச்சினையின் மாதிரியை நேர் எதிரிலுள்ள கூட்டினுள் இடவும்.

07. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் என்ற வகையில் மேலே குறிப்பிடப்பட்ட அலுவலர் அண்ணளவாக எந்தளவு அஞ்சல் வாக்காளர்களுக்கு (எண்ணிக்கைக்கு) உரிய இக்கடமைகளை நிறைவேற்றுகின்றார்: ..........................................................................................................

08. தாபனத் தலைவரின் விதப்புரை:-

மேலே குறிப்பிடப்பட்ட அலுவலரை உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலுக்காக அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரொருவராக இத்தால் நியமிக்கின்றேன். அவருக்குரிய கடமைகள் சம்பந்தமாக அவரை அறிவுறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதையும் அறிவிக்கின்றேன்.

அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலரை நியமிக்கும் தாபனத் தலைவரின் -
பெயர்: ..........................................................................................................
தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..........................................................................................................
பதவி: ..........................................................................................................
தொலைபேசி இலக்கம்: அலுவலக: ............... செல்லிட: .................. தொலைநகல்: ......................
மின்னஞ்சல் முகவரி: ..........................................................................................................

கையொப்பம்: ..................................................

பதவி இலச்சினை: ..................................................

*(இப்படிவத்திலுள்ள எல்லா விபரங்களையும் பூரணப்படுத்துதல் வேண்டும்.)*

**இக்குறியீட்டு இலக்கத்தை www.elections.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*

## உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் - 2023
## அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல் பற்றிய தகவல்கள்

| தொ. இல. | அஞ்சல் வாக்காளரின் பெயர் | பதவி | அலுவலக முகவரி | அத்தாட்சிப்படுத்தும் அலுவலருக்கு அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த திகதி | அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட திகதி | அஞ்சல் வாக்காளரின் பதிவுக்கு உரிய தகவல்கள் | | | | | | தெரிவத்தாட்சி அலுவலரினால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக/ நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பின், அத்தீர்மானம் பற்றிய கடிதத்தின் விபரங்கள் | அஞ்சல் வாக்குச்சீட்டு அடங்கிய காப்புறுதி உறை கிடைக்கப் பெற்ற திகதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தேர்தல் வட்டாரம் | நிருவாக மாவட்டம் | வாக்கெடுப்புப் பிரதேசம் | உள்ளூர் அதிகாரசபையின் பெயர் | வாக்கெடுப்புப் பிரிவின் பெயரும் இலக்கமும் | ஒழுங்கு வரிசை இலக்கம் | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

***2023 உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலுக்கான இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் இத்தகவல்களைப் பூரணப்படுத்தல் வேண்டும்.**